# முல்லைத்தீவு நீதிமன்றத்தில் துவக்குகள்

# மறைந்தன

## மர்மத்தைத் துலக்க பொலிஸார் தீவிரம்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்
போன்: 7119 தந்தி: வைரம்

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ்: 88
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் சித்திரை 27 ரபி. அவ். 3 ஞாயிற்றுக்கிழமை [10-5-70]

அலுமினியத்தின் பைப்புகள்
அன்டன்
P. V. C. பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130

JAFFNA COLLEGE ... 11 MAY 1970 ... UNDERGRADUATE

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பகுதியெங்கும் பரபரப்புக்குள்ளாகியிருக்கின்றது. முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட துவக்குகள் மாயமாய் மறைந்துவிட்டதே இப் பரபரப்புக் காரணமாகும்.

முல்லைத்தீவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரஞ்சித் லியனகே சிலாவத்தையில் உள்ள ஒருவருடைய வீட்டிலிருந்து காணாமற்போன துப்பாக்கிகளிலொன்றைக் கண்டுபிடித்து வீட்டுக்காரரையும் கைதுசெய்தார், இதைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாதுகாவலராகக் கடமையாற்றிய யேசுரத்தினம் என்பவரையும் முல்லைத்தீவைச் சேர்ந்த இன்னுமொரு நபரையும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கைது செய்து முல்லைத்தீவு நீதிபதி திரு. திசநாயக்கா முன்னிலையில் ஆஜர்செய்தபோது சந்தேகநபர்களை இம்மாதம் 12-ந் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட சில பருப்பு மூடைகளும், அரிசி மூடைகளும் மறைந்துவிட்டதாகவும், அவற்றிற்குப்பதில் மண் மூடைகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. காணமற்போன துப்பாக்கிகளைக் கண்டுபிடிப்பதிலும், இக்களவு சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதிலும் இன்ஸ்பெக்டர் திரு. லியனகே தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

# மலையக தமிழருக்கு பிரதிநிதித்துவம் இரு அங்கத்துவ தொகுதியாக்குக

## இ. தொ. கா யோசனையை அரசு பரிசீலிக்கிறது

கொழும்பு, சனி

இந்திய வம்சாவழியினர் அங்கம்வகிக்கக்கூடிய வகையில் மலையகத்திலுள்ள சில தொகுதிகளை வரும் பொதுத் தேர்தலின் பின்னர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கும்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த யோசனையை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துள்ளது.

மலையகத்தில் இந்திய வம்சாவழியினர் கூடுதலாக வாழும் சில தொகுதிகளையும் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது.

மஸ்கெலியா, கம்பளை, நுவரேலியா, ஹேவகெட்ட, கொத்மலை, பசறை ஆகிய இத் தொகுதிகளில் கூடுதலாக இந்தியவம்சாவழியினர் வாழ்கின்றனரென்றும், இந்தத் தொகுதிகளை இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாக்கி தமிழர் ஒருவரும் பிரதிநிதித்துவம் பெற வசதிசெய்துதரும்படியும் இதொ கா. அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

மூன்று லட்சம் பேர் இலங்கைப் பிரஜாவுரிமை பெறவிருப்பதால் மேற்படி தொகுதிகளில் மேலும் பலர் வாக்குரிமைபெறக்கூடிய வாய்ப்பு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மொரிசியஸில் தமிழ் குழந்தைகள் அவதி

### புத்தகம்பெறுவதுகஷ்டமாம்

கோட்டை, சனி

மொரிசியஸ், பிஜிபோன்ற தீவுகளில் உள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் புகட்டுவதற்கு தமிழ் நூல்கள் பெறுவது மிகவும் கஷ்டமாயிருப்பதாக அங்குள்ளவர்கள் பலர் இலங்கையிலுள்ள உலகத் தமிழ் நண்பர் கழகத்துக்கு தெரிவித்துள்ளனர். தமிழை மறந்துவரும் தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் நூல்களைச் சேகரித்து அந்நாட்டைச் சேர்ந்தவர்களிடம் சேர்ப்பிக்க உலகத்தமிழ் நண்பர் கழகம் முனவநதுள்ளது.

தமிழ்ப் பற்றுமிக்க அன்பர்கள் பழைய, புதிய தமிழ்ப் பாடப்புத்தகங்களை 43, நுவரெலியா வீதி வெலிமடையிலுள்ள உலகத்தமிழ் நண்பர் கழகச் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படியும் அல்லது கே. அப்பாபிள்ளை, தபால்பெட்டி இலக்கம் 779, சூவா, பிஜித்தீவு என்ற விலாசத்துக்கோ, அல்லது எஸ். பொன்னன், றியூனியன் வீதி, வாகோஸ், மொறிசியஸ் என்ற விலாசத்துக்கோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## "சகல ஊழியர்களினதும்

## "பிந்திக் கிடைத்த பிரஜாவுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்குக"

இங்கு இணைத்த

## முதலாவது டீசல் ரயில் என்ஜின்!

கோட்டை, ஞாயிறு

இலங்கையில் பொருத்தப்பட்ட முதலாவது டீசல் ரயில் என்ஜின் ஓடவிருக்கிறது! இரத்மலானையில் உள்ள புகையிரத வேலைதளத்தில் இந்த என்ஜின் பொருத்தப்பட்டது. இந்த முதலாவது டீசல் என்ஜின் பரீட்சார்த்தமாக அடுத்த சில தினத்தில் ஓட்டிப்பார்க்கப்படும்.

---

## வேலைநீக்க அறிவித்தல் வாபஸ்

கோட்டை, சனி

சுமார் 400-க்கும் அதிகமான இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த

## 'தமிழர் உரிமை பெற பாட்டாளிகள்தான் உதவுவர்'

— உடுவில் கி.ச.தலைவர்

தாவடி, சனி

அகில இலங்கையிலும் நிதானமான கட்சியாக தமிழினத்துக்கு உரிமை கோரும் கட்சியாக, தமிழரின் விடுதலை இயக்கமாகச் செயல்படும் கட்சி தமிழரசுக் கட்சியே. இக் கட்சியின் வேட்பாளரான முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் உடுவில் தொகுதியிலுள்ள எமது சாவற்காடு கிராமப் பகுதிக்கு 2 லட்சம் ரூபா வரையிலான ஒரு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி வந்தார். சில பெருச்சாளிகளின் தலையீட்டால் இத்திட்டம் தாமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் இத் திட்டம் நிறைவேற திரு. தருமலிங்கம் உதவுவார்.

இவ்வாறு சுதுமலை சாவற்காடு பகுதியில் தேர்தல் பணிமனைத் திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. க. சிவஞதி குறிப்பிட்

குழப்பங்களை ஏற்படுத்தி மக்களின் மனதை மாற்றிவிடலாம் என சில அரசியல் வாதிகள் எண்ணுவது தவறானதாகும்.'

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் பேசும்போது, 'தமிழ் மக்கள் தாங்கள் இழந்த உரிமைகளைப் பெற சாதாரண மக்கள்தான் உதவுவார்களே யொழிய பிரமுகர்கள் ஒருபோதும் முன்வர மாட்டார்கள். ரஷ்யா போன்ற நாடுகளின் அரசியல்வாழ்வை மாற்றியமைத்து மக்கள் சுபீட்சமானவாழ்வை ஆரம்பிக்க ஏழைப் பாட்டாளி மக்களின் ஒத்துழைப்புத்தான் பெரிதும் உதவியது. எனவே தமிழர் உரிமைக்குப் பாட்டாளி மக்களே உதவுவர் என்பது திண்ணம்' என்றார்.

மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு, திரு. க. சிவசம்பு,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேகரித்து அந்நாட்டைச் சேர்ந்தவர்களிடம் சேர்ப்பிக்க உலகத்தமிழ் நண்பர் கழகம் முன்வந்துள்ளது.

றியூனியன் வீதி, வாகோஸ், மொறிசியஸ் என்ற விலாசத்துக்கோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## "சகல ஊழியர்களினதும் பூரண ஒத்துழைப்பு வேண்டும்"

**—யாழ். அரசாங்க அதிபர்**

யாழ்ப்பாணம், ஞாயிறு

'அரசாங்கத்தின் மேலதிகாரிகளிலிருந்து சிறுஊழியர் வரை பூரணமாக ஒத்துழைத்து கடமைசெய்யும்போதுதான் அரசாங்க நிர்வாகத்தின் சிறப்பு வெளிப்படுகிறது' என யாழ் பழைய கச்சேரியில் அமைந்துள்ள அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் யாழ் கிளை அலுவலகத்தினை திறந்து வைக்கும்போது யாழ். அரசாங்க அதிபர் திரு. எவ் ஸி. பீட்டர்ஸ் கூறினர். சங்கத்தலைவர் திரு. க. செல்லத்துரை தலைமையில் விழா நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, திரு. வி, குமாரசாமி, அரசாங்க லிகிதர் சேவைசங்கத் தலைவர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்.

இவ்விழாவினை முன்னிட்டு நடைபெற்ற தேநீர் விருந்துக்குப்பின் சங்க இணைச் செயலாளர் திரு. சி வேலுப்பிள்ளை பேசுகையில் தனக்கெனஓர் அலுவலகத்தினை அமைக்க சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியும் அதற்கென ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் நன்றி தெரிவித்தும் சங்கம் கூடிய கெதியில் அங்கத்தவருக்கென சிங்கள வகுப்பினை ஆரம்பிக்க இருப்பது பற்றியும் தெரிவித்தார்.

## சம்பந்தர் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று தொடக்கம் நாளை வரை திருஞானசம்பந்தர் மஹோற்சவம் நல்லை ஞான சம்பந்தர் ஆதினத்தில் நடைபெறும்.

ஆதினத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு விசேடபூசையுடன் மஹோற்சவம் ஆரம்பமாகும்.

# "பிந்திக் கிடைத்த பிரஜாவுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்குக"

## தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி பி. சமரசிங்காவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் சந்தித்து இலங்கை இந்திய பிரஜாவுரிமை விண்ணப்பம் சம்பந்தமாக பேசினர்.

கொடுக்கப்பட்ட காலக்கெடுவான ஏப்ரல் 30-ல் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெற்ற பிரஜாவுரிமைகான மறுப்பத்திரத்திரங்களையும் பரிசீலனைக்கு எடுக்கும்படி திரு. தொண்டமான் கேட்டுக் கொண்டார்.

காலக்கெடுக்குப்பின்னர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளைதாம் மேற்கொள்வதாக திரு. தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்கு உறுதி அளிததுள்ளார்.

[சி. பி. ஏ]

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட 298-வது தேசிய லொத்தர் சபை சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு:
23 C 0011 ரூ. 84,660

2-ம் பரிசு:
23 B 0607 ரூ. 33,864

3-ம் பரிசு
22 J 0875 ரூ. 8466

தலா ரூபா 423.30 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு

| | |
|---|---|
| 07 J 0346 | 07 D 0808 |
| 17 U 0211 | 09 O 0332 |
| 34 V 0514 | 11 F 0859 |
| 37 S 0122 | 40 V 0972 |
| 22 X 0842 | 13 G 0947 |
| 08 U 0849 | 21 B 0642 |
| 39 E 0839 | 23 D 0413 |
| 27 X 0351 | 25 Z 0235 |
| 06 G 0718 | 17 C 0266 |
| 24 N 0326 | 36 W 0830 |
| 24 V 0833 | 27 B 0412 |
| 29 V 0304 | 37 G 0259 |
| 33 H 0138 | 18 W 0534 |
| 10 Y 0366 | 21 L 0143 |
| 30 H 0921 | 39 N 0545 |
| 34 K 0843 | 26 C 0650 |
| 12 U 0762 | 12 J 0575 |
| 07 M 0512 | 13 X 0931 |
| 01 K 0221 | 11 Q 0104 |
| 25 O 0592 | 29 T 0247 |
| 12 M 0032 | 27 R 0066 |
| 32 B 0505 | 15 C 0875 |
| 15 Z 0332 | 18 L 0154 |
| 28 T 0840 | 18 N 0217 |
| 03 Y 0026 | 39 O 0411 |
| 32 D 0880 | 04 Y 0666 |
| 23 D 0978 | |
| 10 F 0761 | 01 U 0874 |
| 30 M 0742 | 15 K 0711 |
| 30 G 0421 | 21 X 0514 |
| 14 N 0650 | 32 P 0304 |
| 17 S 0417 | 30 C 0235 |
| 23 R 0645 | 12 E 0193 |
| 04 G 0021 | 28 C 0193 |

| | |
|---|---|
| 19 T 0089 | 10 O 0764 |
| 22 Z 0570 | 25 Q 0491 |
| 14 Q 0750 | 07 A 0559 |
| 34 V 0066 | 30 V 0692 |
| 24 L 0108 | 29 S 0900 |
| 17 P 0922 | 22 M 0590 |
| 19 F 0059 | 21 B 0410 |
| 38 W 0888 | 08 W 0254 |
| 32 C 0271 | 23 J 0303 |
| 10 A 0719 | |
| 10 C 0948 | 16 S 0089 |
| 18 K 0107 | 14 N 0646 |
| 31 F 0981 | 25 D 0024 |
| 18 F 0975 | 15 A 0302 |
| 08 K 0086 | 28 S 0728 |
| 32 L 0183 | 16 M 0813 |
| 30 Q 0905 | 27 F 0147 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

## அடுத்த தேர்தல் ஆட்சேப மனு

கொழும்பு, சனி

நாத்தாண்டியா தொகுதியில் போட்டியிடும் திரு. கியூ. பெர்ணண்டோ, திரு டபிள்யூ. பி. ஆர். திசேரா ஆகியோர் தேர்தல் ஆட்சேபன மனுவொன்று கொழும்பு சுப்பிரீம் கோட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தமது கட்டுப்பணமாக 1000 ரூபா செலுத்தியிருக்க வேண்டும் எனவும் இவர்கள் 250 ரூபா செலுத்தியிருப்பதினுல் தேர்தல் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

## இலவச வைத்திய சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மானிப்பாய் கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரியில் இலவச வெளிநோயாளர் வைத்திய சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இம்மாதம் 15-ம் தேதி தொடக்கம் இலவச வைத்தியசேவை நடைபெறும். யாழ்ப்பாண மாவட்ட சுகாதார அதிபதி இம்மாதம் 15-ம் தேதி மாலை 6 மணிக்கு இதை ஆரம்பித்துவைப்பார் என ஆஸ்பத்திரி துணை வைத்திய அதிகாரி டாக்டர் தி. கங்காதரன் தெரிவித்தார்.

## அறிவித்தல் வாபஸ்

கோட்டை, சனி

சுமார் 400-க்கும் அதிகமான இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அமைப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்த வேலைநீக்க உத்தரவு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

செலவைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வேலைநீக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

## சின்னவெங்காய இறக்குமதி

கோட்டை, சனி

யாழ்ப்பாணத்தில் தற்போது சின்னவெங்காய பயிர்செய்கைக் காலமில்லையாதலால் இந்தியாவிலிருந்து சின்னவெங்காயத்தை தொடர்ந்து இறக்குமதி செய்ய உணவு இலாகா ஒழுங்கு செய்துள்ளது.

வில் இத் திட்டம் நிறைவேற திரு. தருமலிங்கம் உதவுவார்.

இவ்வாறு சுதுமலை சாவற்காடு பகுதியில் தேர்தல் பணிமனைத் திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. க. சிவஞதி குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தின் போது இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துரையாற்றிய முன்னுள் உடுவில் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறியாதாவது:

"எனது தொகுதிக்கு நான் எதைத் செய்தேன். என்று சிலர் கேட்கிறுர்கள். நான் எதைச் செய்தேன் என்பதை எனது தொகுதி மக்கள் அறிவர். தமிழ் மக்களின் இழந்த உரிமையைப் பெறுவதற்காக முயன்ருேம். முயல்வோம். நான் தமிழரசுக் கட்சியில் சேராத காலந்தொட்டே தமிழரசுக் கட்சியை ஆதரித்து வந்தவர்கள் சாவற்காடு மககள்.

தான் பெரிதும் உதவியது. எனவே தமிழர் உரிமைக்குப் பாட்டாளி மக்களே உதவுவர் என்பது திண்ணம்' என்ருர்.

மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு, திரு. க. சிவசம்பு, இளைப்பாறிய ஆசிரியர் திரு. மயில்வாகனம் உட்படப் பலர் உரையாற்றினர்.

பருத்தித்துறை

## புதியமாவட்ட நீதிபதி

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ஸி. எம். தர்மலிங்கம் மாற்றலாகிச் சென்றதைத் தொடர்ந்து கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகக் கடமைஏற்றுள்ளார்.

# "அத்துளு குழாய் நீர்த்திட்டம் எனது பேரனின் திட்டமாகும்"

**— முன்னுள் உப சபாநாயகர்**

உடுப்பிட்டி, சனி

"1960-ம் ஆண்டு அரசியலில் புகுந்த காலந்தொடக்கம், இத்தொகுதி மக்கள் தந்த அமோக ஆதரவும், அன்புமே என்னை உபசபாநாயகராக உயர்த்தியது. இதனை என்னுல் ஒருபோதும் மறக்கமுடியாது. சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அவர்களின் விஷயங்களில் நான் கொண்டுள்ள அக்கறையை நன்கறிவர். 1960-65-ம் ஆண்டுவரையில் நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களிலும் படிப்படியாகத் தமிழ்க்காங்கிரஸிற்கு ஆதரவு கூடிக்கொண்டு வருகின்றது."

முன்னுள் உபசபாநாயகரும் உடுப்பிட்டித்தொகுதி தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளருமான திரு. மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கரணவாய்தெற்கு, சோளங்கன் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டினுர்.

இக்கூட்டம் திரு. கந்தையா செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எனது தொகுதிக்குநான் செய்த அபிவிருத்தித்திட்டங்களை காலஞ்சென்ற பொன் கந்தையா செய்தது என்கின்றனர். அத்துளு குழாய் நீர்த்திட்டம் கந்தையாவின் திட்டம் அல்ல. பல ஆண்டுகளுக்குமுன் இங்கு மணியகாரனுக இருந்த எனது பேரனுர் கொண்டுவந்த திட்டம்தான் இது. இத்திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர நான் அரசாங்கத்தின் உதவியை நாடியபொழுது எனது தொகுதிமக்கள் மீதும் என் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையினுல் அரசாங்கம் குழாய்நீர்த் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கி வேலைகளை ஆரம்பித்தது.

சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் பேசுகையில், சிறுபான்மைச் சமூக மக்களின் முன்னேற்றத்திற்காகவும், உயர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் உடுப்பிட்டி சிவா என்ருர்.

பருத்தித்துறை காங்கிரஸ் வேட்பாளர் திரு. ந. நடராசா பேசும்போது சமஷ்டிக்கட்சி வளர தமிழினமும் படிப்படியாக அழியத் தொடங்கியது. சத்தியாக்கிரகம் மூலம்தான் வடபகுதிக்கு இராணுவம் வந்தது என்று கூறினர்.

மற்றும் திருவாளர்கள் கே. மோதிலால்நேரு, வி. சரவணமுத்து, வி. பி. சுந்தரலிங்கம், சிவதாஸ், ந. கிருஷ்ணராசா, செல்வி இலங்காதேவி ஆகியோரும்பேசினர்.

## இன்று

இன்று வண்ணை ஸ்ரீவைதீஸ்வரன் ஆலயத்தில் மணவாளக் கோலத்திருவிழா இன்று பகல்10-00 மணிக்கு அஷ்டோத்திரசகசங்காபிஷேகமும் இரவு 7-00 மணிக்கு கல்யாணசுந்தர மூர்த்திக்கு பூஜையாகி சுவாமி வீதி வலம் வருதலும் நிகழும்.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது. நாளை தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

# கோவில்களை உடைத்துத்திருட்டு: ஒருவர் அகப்பட்டார்

## சந்தேக நபா குற்றத்தை ஒப்புக்கொண்டாரா

யாழ்ப்பாணம், ஞாயிறு

**சமீப நாட்களாக வடபகுதியில் நடைபெற்றுவரும் கோவில் களவுகள் சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.**

கடந்த சில மாதங்களாக வடபகுதியிலுள்ள பல சைவக்கோவில்களில் களவுகள் நடைபெற்றதும் இக்களவு சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்ததும் தெரிந்ததே.

பல கோவில் கதவுகள் டைனமைட் மூலம் பெயர்க்கப்பட்டு விக்கிரகங்களின் அடியிலிருந்து தங்கத்தகடுகளும் மற்றும் பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. சில தினங்களின் முன்னும் அல்வாயிலுள்ள ஆலயமொன்றில் டைனமைட் உபயோகித்துக் களவாடப்பட்டது.

பொலிசாரின் தீவிர வேட்டை காரணமாக இப்போது சரசாலையைச் சேர்ந்த ஒருவர் சிக்கியுள்ளார். கந்தையா என்ற இந்நபர் வட்டுக்கோட்டையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் நேற்று மாலை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் காரியாலயத்திற்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். இவர் மூலம் களவுகளில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்யலாமெனப் பொலிசார் நம்புகின்றனர்.

வட்டுக்கோட்டை மாவடி கந்தசாமி கோவிலில் நேற்றிரவு டைனமைட் வைத்து கதவுகளைத் தகர்க்க முயன்றபோதே, அயலவர்களிடம் இவரையும்மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டாராம் சங்கானைப் பொலிசாரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார்.

வடபகுதியில் ஏற்கனவே பல கோயில்களில் நடந்த திருட்டுக்களைத் தாமேசெய்ததாக பொலிஸ் விசாரணையில் இவர் ஒப்புக்கொண்டுள்ளாராம். கோஷ்டியாக இல்லாமல் தனியனுகவே இத்திருட்டுக்களை நடத்தியதாகக் கூறுகிருராம். பலம் வாய்ந்த ஆலயக்கதவுகளை டைனமற் மூலம் சுலபமாக தகர்க்கலாமென்பதனுலேயே டைனமைற்றை தாம் உபயோகித்தாகத் தெரிவித்தாராம்.

கோயில்களில் கொள்ளையடித்த தங்கத்தகடுகளை யாப்பாணம் கன்னுதிட்டியிலுள்ள ஒருவரிடமே கொத்து உருக்கி வந்ததாக இவர் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த ஆசாமி பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வகுப்புக்கள்

'பாமசிஸ்ற்' பரீட்சைக்கு (External Pharmacist Examination) வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும் விக்னேஸ்வரன், 7, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2119

### கல்வி

சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல் வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 2210

### விற்பனைக்கு

பளையைச் சேர்ந்த மாசார் கிராமத்தில் 70 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. விளம்பர இல. 2215, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2215

வீடு:

புங்கங்குளம் ரோட், கொழும்புத்துறையிலுள்ள 23-ம் நம்பர் வீடு 2 1/2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். து. இரத்தினகோபால், 16/1, கில்னர் லேன். வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2213

இயந்திர சாதனங்களினாலே தயாரிக்கப்பட்ட ''ஒட்டகமார்க்'' செங்கற்கள் விற்பனைக்குண்டு. ரில்லர் ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 2212

### தேவை

எமது நிலையத்தில் வேலை நேரங்களில் வந்து கடமையாற்றக்கூடிய தையல் அனுபவமுள்ள பெண்கள் விண்ணப்பிக்கவும். வேலணை வீவிங் இன்டஸ்றீஸ், வேலணை 1. 2216

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# வேட்பாளர் அறிமுகம்

## சாவகச்சேரி தொகுதி



வி. என். நவரத்தினம்
(தமிழரசுக் கட்சி)

தமிழுக்கு உரிமை கிடைக்கும்வரை தனது தாடியை எடுக்கமாட்டேன் என்ற இலட்சிய சபதம் எடுத்துள்ள திரு. வி. என். நவரத்தினம் பலரது அன்புக்குப் பாத்திரமானவர்.

தன்னுடைய தொகுதி மக்களினாலும், பிறதொகுதி மக்களினாலும் விரும்பக்கூடிய அளவுக்குச் சகசமாகப் பழகி அன்னார்க்கு உதவுகின்ற சிறந்தகுணமும் இலட்சியப் பண்புமுடையவர் திரு. வி. என். நவரத்தினம்.

இவர் தமது ஆரம்பக்கல்வியை நுணுவில் மேற்கிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆரம்பித்தவர். பின்னர் றிபேக்கல்லூரியிலிருந்து எட்டாம் வகுப்புடன் வெளியேறி தனது உறவினருடன் இருந்து இரத்தினபுரி சிவிலி வித்தியாசாலையில் பயின்றவர்.

படிக்கும் காலத்திலேயே பேச்சுப்போட்டி, கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்டு பரிசில்கள் பெற்றிருக்கிறார்.

பதின்மூன்று வயதிலேயே 9-ம் வகுப்பை முடித்துக் கொண்டமையால் ஊர் திரும்பிய இவர் 17 வயதுவரை சர்வகலாசாலை புகுமுகப் பரீட்சைக்காகக் காத்திருந்து பின்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சேர்ந்தார். 17-வதுவயதிலேயேமேற்படி பிரவேசப்பரீட்சையில் சித்தியடைந்தார்.

47-ம் ஆண்டு ஜூன்மாதம் சர்வகலாசாலையில் சேர்ந்து விவாதப்பிரிவில், சட்டக் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். சர்வகலாசாலையிலிருந்து வெளியேறிய திரு. நவரத்தினம் ஆசிரியர் பணியில் ஈடுபட விரும்பியதினால் 52ம் ஆண்டு சாவகச்சேரி 'றிபேக்' கல்லூரியில் ஆசிரியர் பணியை ஏற்றார். ஒரு வருடத்தின்பின் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அங்கு நான்கு மாதங்கள் கடமையாற்றியபின் திரும்பவும் சட்டக்கல்லூரியில் சேர்ந்து நியாயவாதியாக முதலாம் பிரிவில்தேர்ச்சிபெற்றார். சட்டக்கல்லூரி விவாதக்கோஷ்டித் தலைவராகவும் விளங்கினார்.

நியாயவாதியாகத்தேர்ச்சி பெற்று வெளியேறிய திரு. நவரத்தினம் 'கிரிமினல்' பகுதியை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடமும், 'சிவில்' பகுதியைத் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடமும் பயிற்சி பெற்றவர். இருவரின் நற்சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டவர் இவர்.

56ம் ஆண்டு அரசியலில் புகுந்து முதல்முதல் சாவகச்சேரித் தொகுதிக்கு (கிளிநொச்சி உட்பட) இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப்போட்டியிட்டார் இந்த முதலாவது தேர்தலிலேயே சுமார் 7000ம்மேலதிகவாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

சாவகச்சேரிப் பிரதிநிதியான ஆரம்பநாட்களிலேயே சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார். தாக்கப்பட்டு கொழும்பிலுள்ள 'ரட்ணா' வைத்தியசாலையில் இரண்டு வாரம் சிகிச்சை பெற்றார்

58ம் ஆண்டு அவசரகாலச் சட்டப்பிரகடனத்தினால் 3 மாதம் தடுப்புக் காவலில் இருந்தார். 60ம் ஆண்டு பங்குனி மாதம் நடந்த பொதுத்தேர்தலிலும் இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளனாக சாவகச்சேரியில் (கிளிநொச்சி தவிர)போட்டியிட்டு சுமார் 8000 மேலதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 60ம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த தேர்தலிலும் போட்டியிட்டு 9000 வரை மேலதிக வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

61-ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டதினால் 4 மாதம் பனாகொடை முகாமில் அரசியல் கைதியாகச் சிறைவைக்கப்பட்டார். 65-ம் ஆண்டு நடந்த தேர்தலிலும் 9000க்கு மேற்பட்ட மேலதிக வாக்குகள் பெற்று ஆட்சிமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கலைக்கப்பட்ட பாராளுமன்றம்வரை அங்கத்தவராகஇருந்திருக்கிறார்.

67ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளரின் பிரதிநிதியாக டென்மார்க்கில் நடந்த சர்வதேசக் கருத்தரங்கில் அங்கு சென்று பங்குபற்றினார். திரும்பிவரும்போது இஸ்ரேலுக்கும் மேற்குஜெர்மனிக்கும் சென்று அரசாங்க விருந்தினராகஇருவாரங்கள் தங்கியிருந்தார். அங்கு இருக்கும்போது 'சமஷ்டி' முறையின்கீழ் அரசாங்கம் சீராக நடைபெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்ததெனக் கூறினார்.

தமிழரின் விமோசனம் கருதி, கட்சியின்கட்டுப்பாட்டிற்குப்பணிந்து, இம்முறையும் பொதுத்தேர்தலில் நிற்கிறேன் என்று பணிவாகத் தெரிவிக்கும் நவரத்தினம் அரசியலில் மாத்திரமல்லாது கலை, கலாச்சாரத்துறைகளையும் ஊக்குவிக்கும் நன்நோக்குடையவர்.

வி. குமாரசுவாமி
(தமிழ்க் காங்கிரஸ்)



ஆண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றுகொண்டு சட்டக் கல்லூரி மாணவனாக இருந்து கொண்டே 47-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சாவகச்சேரித் தொகுதியில் (கிளிநொச்சி உட்பட) அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு 10,000 வரை அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார்.

48-ம் ஆண்டு முதலாம் பிரிவில் முதலாவதாக நியாயவாதியாகச் சித்தி எய்தினார். 52-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேற்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

52-ம் ஆண்டு தொடக்கம், 56-ம் வரையுள்ள காலத்தில் உதவி உணவு மந்திரியாகவும். உதவி போக்குவரத்து மந்திரியாகவும், உதவி நீதி மந்திரியாகவும் பதவி வகித்திருக்கிறார்.

மலையாளப் புகையிலை ஏற்றுமதி, இறக்குமதி விருத்தி காரணமாக பேச்சுவார்த்தை நடாத்த டில்லிக்கும், அரிசி றப்பர் பேச்சுவார்த்தை சம்பந்தமாகச் சீனாவிற்கும், சர்வதேசப் பாராளுமன்றப் பிரதிநிதியாக லண்டன், ஜலாந்துகளுக்கும், பொது நலவாய நாடுகளின் இலங்கைப் பிரதிநிதியாக கிழக்காபிரிக்காவிற்கும் சென்றுள்ளார்

கைதடியிலுள்ள யாழ்ப்பாண வயோதிபர் இல்லம், சாவகச்சேரித் தொகுதியில் மருந்துச்சாலைகள் உபதபாற்கந்தோர்கள், பாடசாலைகள் இவர் காலத்தில் ஏற்பட்டன. வடக்கு வளம்பெற வேண்டுமென, எண்ணி மகாவலிகங்கையை வடக்கே கொண்டுவரவேண்டும் என்ற திட்டத்தில் தனக்கு முக்கிய பங்குண்டு என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

56-ம் ஆண்டில் காங்கிரசிலிருந்து விலகி அடிப்படைத்தமிழர்முன்னணியை உருவாக்கினார் அதன் தலைவராகத் தெரியப்பட்டு அதன் வேட்பாளராகவே சாவகச்சேரித் தொகுதியில் கிளிநொச்சி உட்பட) போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

58-ம் ஆண்டு கலாசாலை விடயமாக அமெரிக்கா ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு மூன்றுமாத சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டு, 58 ம் ஆண்டே 'பரீஸ்டர்' பட்டமும் பெற்றுத் திரும்பினார்.

60-ம் ஆண்டில்அடிப்படை தமிழர் முன்னணியைக் கைவிட்டு மீண்டும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக சாவகச்சேரித் தொகுதியில் (கிளிநொச்சிதவிர)போட்டியிட்டுதோல்வியடைந்தார். 60-ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த பொதுத் தேர்தலில் பங்கு கொள்ளாது விலகி நின்றார்.

65-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் சாவகச்சேரித் தொகுதியை விட்டு கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார்.

விவசாய விருத்தி சம்பந்தமாக 69-ம் ஆண்டு ஜப்பான், சிங்கப்பூர், கொங்கொங் சென்று திரும்பியுள்ள திரு. வி. குமாரசாமி தென்மராட்சித் தொகுதி மக்கள் வேண்டிக் கொண்டதிற்கிணங்க 70-ம் ஆண்டுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ். கட்சி வேட்பாளனாக முன்வந்துள்ளார்.

(1) சுதந்திர இலங்கையில் எல்லோருக்கும் நிரந்தர வேலை இதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல்.

(2) காணி இல்லாதவைக்குக் காணி, வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கச் செய்தல்.

(3) செய்கை மழை மூலம் விவசாய விருத்தித் திட்டம்.

(4) மகாவலி கங்கையை மூன்று வருடத்தில் வடக்கே கொண்டு வருதல்.

ஐக்கிய இலங்கையை உருவாக்குதல் என்பன இவரது எதிர்காலத் திட்டங்களுள் சிலவாகும்.

## ஏல விற்பனை

வில்லூன்றி ரோட் வெள்ளாந்தெரு No 6 கு. செல்லையா அவர்களிடம் 4-1-68 முதல் 28-12-68-ம் திகதி முடிய அடவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் மேற்படி கடையில் 1970-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

C. இரகுநாதன்
2244 ஏலவிற்பனையாளர்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 10—5—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு6-10லயவின்யாசம், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்,7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச் சுருக்கம்.

## வேலணையில் வெடி மீன்

வேலணை, சனி

வேலணை செட்டிபுலத்தின் எல்லையிலுள்ள தலைமுருகை, ஒருவாய் முருகை, நட்டுப்பார், கொழும்பான் முருகை முதலிய கடற்பகுதிகளில் வெடி மூலம் மீன் பிடிக்கப்படுகிறதெனவும், அதிகமாக கரையூர்ப் பகுதியிலிருந்து வந்து வெடிபோடுபவர்களே அதிகம் எனவும், இவர்கள் வெடி மூலம் மீன் பிடிப்பதற்கு மீன்பிடி இலாகா மூலம் கடனாக வழங்கப்பட்ட யந்திர வள்ளங்களைப் பாவிப்பதாகவும் நம்பப்படுகிறது.

வெடி மூலம் மீன் பிடிப்பதால் தங்களுக்கேற்படும் தொழில் பாதிப்புப்பற்றியும். மீன் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவது பற்றியும், வெடிமீனால் மக்களுக்கு நோய் ஏற்படும் அபாயத்தைப்பற்றியும். சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சங்கங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்

## ஆலயதிருப்பணி நிறைவேறியது

யாழ்ப்பாணம். ஞாயிறு

வேலணைகிழக்கு 3-ம் வட்டாரம் புக்கட்டிக்காடு புது நாச்சிமார வைரவர்கோவில் திருப்பணி வேலைகள் முடிந்து ஆனி உத்தரத்தையடுத்து துவரும் 8-ம் நாள் பெரிய யாங்கலுக்கு ஆடியார்கள் ஆயத்தமாயுள்ளனன்


விற்பனவாகிறது! விற்பனவாகிறது!!

புலமைப்பரிசிற்பரீட்சை-உயர்கல்வி
— மாதிரிகை வினாப்பயிற்சி —

I. பொது உளச்சார்பு 2-25
(எட்டு உப பரீட்சைகளையும் அடக்கியது)
II. தமிழ் மொழி 1-50

★ சென்ற வருட வினாக்களைத்தழுவிய சிறந்த பயிற்சி வினாக்கள்.
★ புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்திபெறச் சிறந்த நூல்கள்.

வி. பி. ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்.

கலைவாணி புத்தகநிலையம்
யாழ்ப்பாணம், கண்டி:
2258

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
இன்றுமட்டும் சிவாஜி
ஜி. வரலக்ஷ்மி - நம்பியார் நடித்த
ஹரிச்சந்திரா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
இன்றுமட்டும் சிவாஜி
ஜி.வரலக்ஷ்மி - நம்பியார்
நடித்த
ஹரிச்சந்திரா

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
5வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
திருடன்

வின்ஸர் 5வது வாரம்
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 88-வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-0 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
தில்லானா மோகனாம்பாள்

வெற்றிகரமான 2வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்

கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப்போட்டியிட்டார் இந்த முதலாவது தேர்தலிலேயே சுமார் 7000ம்மேலதிகவாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி -சாவித்திரி
நடித்த
கைகொடுத்த தெய்வம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவனும்சம் லக்ஷ்மி-ராஜ்குமார்
நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)

REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Omar Sharif.
Francoise Dorleac
in
GENGHIS KHAN
(Technicolour)

தெரிவிக்கும் நவரத்தினம் அரசியலில் மாத்திரமல்லாது கலை, கலாச்சாரத்துறைகளையும் ஊக்குவிக்கும் நன்நோக்குடையவர்.

0 0 0

## வி குமாரசுவாமி
### (தமிழ்க் காங்கிரஸ்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வேட்பாளராகிய வே. குமாரசாமி மேற்படி கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவருள் ஒருவர்.

1947-ம் ஆண்டிலிருந்தே அரசியலில் பிரபலம் பெற்று விளங்கும் இவர் 1919-ம் ஆண்டில் பிறந்தவர்.

சாவகச்சேரி சங்கத்தானை இந்துக் கல்லூரியில் ஆரம்ப கல்வியை படிக்கும் போதே மாணவ மன்றங்களில் பதவி வகித்திருக்கிறார். 8-ம் வகுப்பிற் சித்தியடைந்த பின்னர் இவர் யாழ். மத்திய கல்லூரியில் தொடர்ந்து படித்து மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியெய்தினார். இதன்பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்று இன்ரர் ஆர்ட்ஸ் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை சர்வகலாசாலையிற் பயின்று பி. ஏ. பட்டதாரியானார்.

1941-ம் ஆண்டு தான் ஆரம்ப கல்விபெற்ற சங்கத்தானை இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பதவியேற்றார். தொடர்ந்து மூன்றாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் வவனியாவில் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக நியமனம் பெற்றார்.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாக வவனியாவில் இரண்டாண்டுகள் கடமையாற்றியபின் 45-ம்

பானை வயோதிபர் இல்லம், சாவகச்சேரித் தொகுதியில் மருந்துச்சாலைகள் உபதபாற்கந்தோர்கள், பாடசாலைகள்

ஐக்கிய இலங்கையை உருவாக்குதல் என்பன இவரது எதிர்காலத் திட்டங்களுள் சிலவாகும்.

யாழ்ப்பாணம், கண்டி:
2258

THE JAFFNA ACADEMY
Chundikuli, Jaffna. Phone No. 617

New term re-opened on 8-5-70.

1. Classes in the Tamil medium for G. C. E. (Ordinary-Level & (Advanced-Level) Examinations Dec. 1970.

2. A special revision class can be arranged for those sitting the G. C. E. (Advanced-Level) December 1970 Examination in the English Medium. Those interested apply immediately.

3. Tuition classes in individual subjects for the Ordinary-Level and Advanced-Level Examinations. 4-30 p. m. to 7-30 p. m.

8-5-70 Director.

2257



டிஸ்பிரின்
கொண்டு
தலைவலி, நோவு, சளிசுரம்,
காய்ச்சல், தடிமலிலிருந்து
நிகரற்ற
துரித
நிவாரணம் பெறுங்கள்



அதி துரித நிவாரணம்

டிஸ்பிரின் கரையக் கூடியதாகையால் இரதத்தோட்டத்தில் விரைவில் சேரியும் போதே உடனடியாகச் செயலாற்றத் தொடங்கி மிகத் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

பாவிப்பதற்கு அதி பாதுகாப்பானது

டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு, ஒழுங்கான பாவனைக்கு பாதுகாப்பானது என்று காணப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரைகளைப் போலன்றி டிஸ்பிரின் கரையக் கூடியதாகையால், அது உங்கள் வயிற்றில் அசௌகரியத்தையும் பாதகவிளைவுகளையும் உண்டு பண்ணக் கூடிய அமிலத்துகள்களை விடுவதில்லை.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள் ஏனெனில் டிஸ்பிரின் மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணமளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.




2 மாத்திரைகளை நீரில் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு பெட்டியிலுள்ள அளவுப பிரமாணங்களைப் பாருங்கள்.

P.9302

நிகரற்ற துரித நிவாரணத்திற்கு எப்போதும் டிஸ்பிரின் பாவியுங்கள்.

ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க துருப்புகள் அடுத்த மாத இறுதிக்குள் வெளியேறிவிடும்

## கம்போடிய நிலைபற்றி திரு. நிக்ஸன் விளக்கம்

வாஷிங்டன், மே. 9

கம்போடியாவுக்குள் அனுப்பப்பட்ட சகல அமெரிக்கத் துருப்புகளும் அடுத்தமாத இறுதிக்குள் அங்கிருந்து வெளியேறிவிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. ரிச்சர்ட் நிக்ஸன் இன்று மிகப்பரபரப்பான சூழ்நிலையில் நடந்த பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அறிவித்தார்.

இந்தோசீனு சம்பந்தமாக நிக்ஸன் கடைப்பிடிக்கும் கொள்கையை செனட்டர்கள் காங்கிரஸ் அங்கத்தவர்கள் பலரும் கண்டிப்பதுடன் இந்தோ சீனுவில் அமெரிக்க இராணுவத்தின் செலவுத் தொகையில் துண்டு விழுந்ததாகவும் திட்டமிட்டுள்ள அதேசமயம், வெள்ளை மாளிகைமுன் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஆயிரக்கணக்கில் வாஷிங்டன் வந்து குவிந்துகொண்டிருந்தசமயத்தில வெள்ளை மாளிகையில் பத்திரிகைநிருபர்களின் மகாநாடு நடைபெற்றது. நிருபர்கள் பலரும் இந்தோசீன சம்பந்தமாக திரு. நிக்ஸன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றித்துளைத்துளைத்துக் கேள்விகள் கேட்டனர்.



கம்போடியாவுக்குள் ஒரு சில மைல்தூரத்திற்கு அமெரிக்கத் துருப்புகள் அனுப்பப்பட்டது நியாயமென்பதை திரு. நிக்ஸன் எடுத்துக் கூறினர்.

ஆனலும் அடுத்தமாத முதல்வாரத்திலிருந்து அமெரிக்கத் துருப்புகள் திரும்பத் தொடங்குமென்றும் அடுத்தமாத நடுப்பகுதியில் பெருமளவில் துருப்புக்கள் வெளியேறி அடுத்தமாத இறுதியில் சகல அமெரிக்கத் துருப்புக்களும் அங்கிருந்து வெளியேறி விடுமென்றும் திரு. நிக்ஸன்தெரிவித்தார்.

## வெள்ளை மாளிகை முன் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், மே 9

இந்த வருடத்தில் இதுவரை அமெரிக்கா கண்டறியாத அளவில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தோ சீனம் சம்பந்தமாக நிக்ஸன் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஜனதிபதியின் வாசஸ்தலமான நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு ஆயிரக்கணக்கான மாணவர்களும் இளைஞர்களும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வாஷிங்டனுக்கு வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள்.

நியுயோர்க்கில் கட்டிடத் தொழிலாளர்களும் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்

## கருணாநிதி வீடு திரும்பினார்

சென்னை, மே 9

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று காலை ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினார்

கடந்த மாதம் 28-ம் திகதி முதலமைச்சர் கருணாநிதிக்கு சென்னை எழும்பூரிலுள்ள அரசாங்க கண் ஆஸ்பத்திரி

## ஜெர்மனியில் இலங்கைத் திரைப்படங்கள்

கோட்டை, ஞாயிறு

இன்று தொடக்கம் இம்மாதம் 17-ம் திகதிவரை மேற்கு ஜெர்மனியிலுள்ள பிராங்பேட் நகரத்தில் ஆசிய திரைப்பட விழா நடைபெறவிருக்கிறது. இத்திரைப்படவிழாவில் இலங்கைத் திரைப்படங்களும் இடம் பெறுகின்றன.

இலங்கைஅரசாங்கதிரைப்பட பகுதியின் 'அறுவடை', லெஸ்டர் பீரிஸின் 'ரன்சலு' ஆகிய படங்களை மேற்படி விழா அமைப்பாளர் ஏற்றுள்ளனர். இவ் விழாவை பிராங்பேட் நகரிலுள்ள வளர்ந்தோர் கல்விச் சங்கம் நடத்துகிறது.

## அரிசி வெட்டுக்குக் காரணம் உலக வங்கி

—சிறிமா

தங்காலை, சனி

உலகவங்கியின் ஆலோசனையின் பேரிலேயே தேசிய அரசாங்கம் மக்களின் பங்கீட்டரிசியைக் குறைத்தது. மக்களுக்கு இதைமறைத்து உலகில் அரிசி குறைவாக உள்ள காரணத்தாலேயே இறக்குமதி தடைசெய்யப்பட்டதுஎனப் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். நாங்கள் மக்களின் ஆதரவுடன் நாட்டை ஆளுவோமேயன்றி உலவங்கியினுலோ அல்லது அதுபோன்ற வேறு நிறுவனங்களின் ஆலோசனையின் பேரிலோ ஆளமாட்டோம்.

பெலியத்தையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவாமேலும் தொடர்ந்து பேசுகையில் 'நாங்கள் மக்களுக்கு திரு டட்லி சேனநாயக்கா போன்று வாக்குறுதிகளை வழங்கமாட்டோம். அடுத்துமக்கள் குழுக்களைப்

## பம்பாய் கலவரத்தில் 40 பேர்பலி; 400 பேர் காய

பம்பாய், மே. 9

மகாராஷ்டிரத்தின் சில பகுதிகளில் இருசமூகத்தவர்களுக்கிடையில் கடந்த சில தினங்களில்நடைபெற்ற கலவரங்களிலும் கலவரத்தை அடக்குவதற்காக பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததிலும் 40 பேர்கொல்லப்பட்டனர். சுமார் 400 பேர் காயமடைந்தனர். இதுவரை 360 பேர் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தீவைப்புச்சம்பவங்களால் மூவாயிரம் பேர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

நிலைமைஇப்போது கட்டுக்கடங்கியிருப்பதாகவும் நேற்றிரவு இரண்டொரு இடங்களில் சிறு சிறு சம்பவங்கள் நடந்ததைத் தவிரவேறு பெரிய சம்பவங்கள் எதுவும் நிகழவில்லையென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

கலவரத்தினல் பாதிக்கப்பட்ட இருநகரங்களுக்கு உள்துறை அமைச்சர் திரு வை. பி. சவான் நேரில் சென்று பார்வையிட்டார். சிறுபான்மையினத் தவர்களுக்குப் பெரும்பான்மை இனத்தவர் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் இதில் கட்சி வேறுபாடுகளுக்கு இடமிருக்கக்கூடாதென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கடைக்குப் போன தாய் திரும்பி வந்து பார்த்த போது குழந்தையின் சடலம் கிணற்றில் கிடந்தது

முல்லைத்தீவு, சனி

ஒருவயதுப் பச்சிளங்குழந்தை கிணற்றில்விழுந்து பரிதாபமரணமான சம்பவம் முல்லைத்தீவிலுள்ள சின்னுத்தங்காட்டில் நடந்துள்ளது.

முல்லைத்தீவு சின்னுத்தங்காட்டில்வசிக்கும் மரியதாஸ் பெர்னண்டோஎன்பவர்மீன் பிடிக்கச் சென்றுவிட்டதாகவும் மனைவி தன் ஒருவயதுக் குழந்தையான ரசினியை வீட்டு விறுந்தையில் நித்திரையாக்கிவிட்டு ஒரே வளவில் வசிக்கும் மற்றக்குடும்பத்தாரிடம் தமது பிள்ளையைப்பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கடைக்குச் சென்றதாகவும், கடையினின்றும் திரும்பிய தாய், பிள்ளையைக்காணுது தேடிய போது பிள்ளையின் சடலம் வளவுக்குள் இருக்கும் கிணற்றில் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

முல்லைத்தீவு மரண விசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா மரண விசாரணை செய்து விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## 'எதிர்கால சமுதாயத்தின வளர்ச்சியில் கவனம் வேண்டும்'

— வி.என்.நவரத்தினம்

மட்டுவில், சனி

'முடியாட்சி நீங்கி மக்களாட்சி நடைபெறும் காலம் இது. நீதிவழி நடைபெற்றுவரும் ஜனநாயக ஆட்சியிலே மக்கள் தத்தம் கிறது. இந்த உண்மையை எந்த ஒரு குழந்தையும் நன்கு அறியும்.

இதே வேளையில் எமது தொகுதி அபிவிருத்தி வேலைகளிலும் எதிர்க்கட்சியில்

## "கங்கை வடக்கே வந்தால் எழுபதினுயிரம் பொறியியல் நிபுணர்களுக்கு வேலைவாய்ப்பு"

மட்டுவில், சனி

"மகாவலிகங்கை வடக்கே வருவதைத் தொடர்ந்து எழுபதினுயிரம் பொறியியல் நிபுணர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் ஏனைய எத்தனையோ ஆயிரம் பல ரகத்தொழிலாளர்களுக்கும் பல தரப்பட்ட வேலைவாய்ப்புகள்கிடைக்கக் கூடிய நிலை ஏற்படுவதுடன், பெருமளவு மின்சாரத்தையும் உற்பத்தி செய்யக் கூடிய நிலை உருவாகும். அத்துடன் ஆறில்லாத நமது ஊரில் நீர்வளம் பெற்று பயிர் வளம் சிறந்து உணவு விவசாய உற்பத்திகள் அதிகரிக்கும்."

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு. வே. குமாரசாமி கூறினர். சாவகச்சேரி கொவில் குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு குமாரசாமி தொடர்ந்து பேசியதாவது:-

எமது வடபகுதி மக்களின் தவப்பயனுக மதிக்கக்கூடிய மகாவலிகங்கை திட்டத்தை இங்கு கொண்டுவரமுடியாது என்று சிலர் சந்தேகக்குரல் எழுப்புகிருர்கள் எனவே நீங்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களை தெரிந்து ஆடசிமன்றம் அனுப்பினுல் எமதுபகுதியை வாழவைக்கும் மகாவலி கங்கையை மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் கட்டாயம் கொண்டுவருவோம்.

கடந்த பதினான்கு ஆண்டுகளாக இத்தொகுதிகளில் என்ன அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுள்ளன. எனவே எமது தொகுதி அபிவிருத்தி அடைய வேண்டும். இங்கு கைத்தொழில் விவசாய வளம் தொழிக்க வேண்டுய். நமது இளைஞர்கள் குறைகளும் தீர்க்கப்பட வேண்டும்

இன்று எனது தொகுதியிலே எத்தனை பேர் வேலை இல்லாது துன்பப் படுகின்றனர். நான் சாவகச்சேரிப் பிரதிநிதியாக ஆட்சிமன்றத்தில் இருந்தபோது. சாவகச்சேரித் தொகுதியில் இப்படியான வலையில்லா துன்பம் தலைகாட்டவில்லை.

நான் சாவகச்சேரிப் பிரதிநிதியாக ஆட்சிமன்றத்தில் இருந்தகாலத்திலே நாம் பல தொழிற் சாலைகளை நிறுவினேம். பலகுளங்களைக் கட்டுவித்தோம்; குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தினேம். இதனுல் இத்தகைய கொடுமைகளுக்குட்படாமல் மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்.

பல்கலைக்கழகத்தை நாம் எமது மாணவர்களின் வசதிக்காக யாழ்ப்பாணத்திலேயே அமைக்க வேண்டும் என்று கோரினேம் ஆனுல் தமிழரசுக் கட்சியினர் திருக்கோணமலையிற் தான் அமைக்க வேண்டும் என்று கூறி வருகின்றனர்."

வழக்கறிஞர் திரு. சி, பொ. மயில்வாகனம் திரு. ரி. குலேந்திரராசா. செல்வன் கே சிவாதாசன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

## "எந்தச் சக்தி வந்தாலும் எம்மைப் பிரிக்க முடியாது"

முல்லைத்தீவு. சனி

"எமது வவுனியாத் தொகுதியில் சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர் ஆகிய மூன்று இனத்தவர்களும் ஒரே மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிருர்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் நாம் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரைத் தவிர வேறு எவரையும்

வவுனியாத் தொகுதி தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடந்த இக்கூட்டத்துக்கு திரு. ஆ. சின்னத்தம்பி தலைமை தாங்கினுர்.

திரு. சிவசிதம்பரம் பேசும் போது, சென்ற 10 ஆண்டுகளில் வவனியாத் தொகுதி முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் படித்த வாலிபர் தொழில்இன்றி வாடியகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தோ சீனம் சம்பந்தமாக நிக்ஸன் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்கு முன் இளைஞர்களும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வாஷிங்டனுக்கு வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள்.

நியுயோர்க்கில் கட்டிடத் தொழிலாளர்களும் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தெரிவித்துள்ளனர்.

## பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் மூடப்பட்டன

மாணவர்களின் ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி காரணமாக 300 பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. ஒகியோ பல்கலைக்கழகத்தில் நடந்த ஆர்ப்பாட்டதைக் கட்டுப்படுத்த பொலிசார் சுட்டதில் இரு மாணவர்கள் கொல்லப்பட்டதையும் இந்தோ - சீன சம்பந்தமாக நிக்ஸன் கடைப்பிடிக்கும் கொள்கையையும் எதிர்த்து மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதுடன் பெரும் ஆர்ப்பாட்டத்துக்கும் தயார் செய்து வருகின்றனர்.

பிரிட்டனிலும் அமெரிக்காவின் இந்தோ-சீனக் கொள்கையை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. ஸ்டுவர்ட் பேசுவதற்குச் சென்ற வைபவமொன்றில் மாணவர்களின் கூச்சலையும் குழப்பத்தையும் சமாளிக்க முடியாமல் பொலிஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து வெளியேற நேர்ந்தது.

பிரதமர் வில்சன் மான்செஸ்டரில் ஒரு கூட்டத்தில் பேசச் சென்றபோதும் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தையும் கூச்சலையும் சமாளிக்க வேண்டியேற்பட்டது.

### சென்னைத் துறைமுக வேலை நிறுத்தம்

## தலையிடும்படி இந்திராவுக்கு கருணாநிதி தந்தி

சென்னை, மே 9

சென்னைத் துறைமுகத்தில் கடந்த எட்டு நாட்களாக நடைபெற்றுவரும் துறைமுகத்தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவி செய்யுமாறும் இந்தவிஷயத்தில் தலையிடுமாறும் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தந்தி மூலம் கேட்டிருக்கிறார். தொழில் அமைச்சருக்கும் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னைத் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதுசம்பந்தமாகமத்திய மந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திரு மனோகரன் புதுடில்லி சென்றுள்ளார்.

## "லண்டன் பரீட்சையை நடாத்துக!"

பருத்தித்துறை, சனி

மீண்டும் லண்டன் பரீட்சைகளை நடாத்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானத்தை கடுவலகிராமச்சபை, பல்லியகொட கிராமச்சபை, அவிசாவளைப் பட்டினசபை, அட்டன் - டிக்கோயா நகரசபை திருக்கோணமலை நகரசபை ஆகியன நிறைவேற்றியுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்கள் மீண்டும் குரலெழுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால், லண்டன் வெளிமாணவர் பரீட்சைச்சங்கமும் இவற்றுடன் சேர்ந்து போராடவேண்டும் என்று தெரிவிக்கும் சுற்றறிக்கை ஒன்றை மேற்படி சங்கச் செயலாளர் திரு. ஏ. கே. மகாகுமாரகே வடபகுதி உறுப்பினருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கைதடி. சனி

கைதடிதெற்கு மின்னொளி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டம் கழகத் தலைவர் திரு சி.வே. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றபோது கழகத்தின் வளர்ச்சி கருதி அங்கத்தவர்களால் மன்னவன் கைதி, மாலை தந்த பரிசு ஆகிய இரு நாடகங்களை விரைவில் அரங்கேற்றுவதென முடிவு செய்யப் பட்டது.

சென்னை, மே 9

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று காலை ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினார்

கடந்த மதம் 28-ம் திகதி முதலமைச்சர் கருணாநிதிக்கு சென்னை எழும்பூரிலுள்ள அரசாங்க கண் ஆஸ்பத்திரியில் இடது கண்ணில் அறுவைச்சிகிச்சை நடைபெற்றது.

### கோவிலில் திருட்டு

## பொலிஸார் விசாரிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள விஸ்வாசப் பிள்ளையார் கோவிலில்நடந்த திருட்டையிட்டு பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர் கோவில் உடைக்கப்பட்டு மூலஸ்தானத்திலுள்ள பவுண் தகடும் நகைகளும் திருடப்பட்டுள்ளன முன்னர் ஒரு தடவை இக்கோவிலில் திருட்டு முயற்சிநடைபெற்றதாகவும் கோவிலை நெருங்கியதும், திருடர் கோஷ்டிக்கு கண்பார்வை குறைந்ததால்திருட்டு நடைபெற வில்லையென்றும் கோவில் நிர்வாகிகளில் ஒருவர் பொலிசாரிடம்தெரிவித்துள்ளார்

## இன்னும் பணம் கிடைக்கவில்லையாம்

பருத்தித்துறை, வெள்ளி

கடந்த க. பொ. த. (சாதாரண) பரீட்சை விடைத்தாள்கள் திருத்திய பரீட்சையதிகாரிகளுக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. வழக்கமாகச் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் கொடுக்கப்படும் இப்பணம் இவ்வளவு காலமும் கொடுக்கப்படாமைக்கு பொதுத் தேர்தல் வேலைகள் காரணமாயிருக்கலாமென நம்பப் படுகிறது. பரீட்சை முடிவுகளின் பின்னர் விடைத்தாள்கள் மீண்டும் பரிசீலிக்குமாறு பரீட்சார்த்திகள் கோருவதையும் கவனித்தே இப்பணம் கொடுக்கப்படலமெனவும் நம்பப் படுகிறது.

## வன விலங்கு முத்திரை

கோட்டை, சனி

இலங்கை வன விலங்குகளின் படங்களைக் கொண்ட நான்கு புதிய தபால் தலைகளை தபால் திணைக்களம் இம்மாதும் 11ந்திகதி வெளியிடுகிறது.

இந்தத் தபால் தலைகள் நான்கும் முறையே 5 சதம் 15சதம், 50 சதம் 1 ரூபா பெறுமதிஉள்ளவை.

பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவாமேலும் தொடர்ந்து பேசுகையில் 'நாங்கள் மக்களுக்கு திரு டட்லி சேனநாயக்கா போன்று வாக்குறுதிகளை வழங்கமாட்டோம். அடுத்துமக்கள் குழுக்களைப் பற்றி ஐக்யதேசியக் கட்சி தவறான பிரசாரம் செய்கிறது. 'மக்கள் குழுக்கள்' நாட்டுக்குப் புதிதானதொன்றல்ல. இதை எனது கணவர் திரு, பண்டாரநாயக்காவே ஆரம்பித்துவைத்தார் எனக் குறிப்பிட்டார்

## 'ஐ.தே. கட்சி பதவிக்கு வராது'

பத்தேகம, சனி

ஐக்கியதேசியக் கட்சி திரும்பவும் ஒருபொழுதும் அதிகாரத்துக்கு வரமாட்டாது.

அகலியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய பென்துறை - எல்பிட்டியா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு அல்பேட் காரியவாசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் மகாவலித் திட்டம், உணவுற்பத்திப் பெருக்கம் ஆகிய யாவும் மக்களை ஏமாற்றுவதற்கு கையாளப்பட்ட தந்திரங்களாகும். எனவே மக்கள் இவற்றால் ஏமாறாது நன்றாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்' எனக் கூறினார்.

திருவாளர்கள் சூரியாராய்ச்சி, கே. பிரேமானந்தா, குணவர்த்தன உட்படப் பலர் உரையாற்றினர்.

## பட்டதாரிகள் தீர்மானம்

கோப்பாய், சனி

''பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை தேர்தல் தந்திரமாக அரசாங்கம் நோக்குவதுக் கவலையளிக்கத் தக்க விஷயமாகும். எனவே இந்நியமனத்தை வேலையற்றபிரச்னையைத் தீர்க்கும் நோக்கமாக கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும்'' என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் அகில இலங்கை வேலையற்ற பட்ட தாரிகள் சங்க கோப்பாய் கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. கே. சதானந்தன் தலைமையில் இக்கூட்டம் நேற்று நடந்தது.

### — வி.என்.நவரத்தினம்

மட்டுவில், சனி

'முடியாட்சி நீங்கி மக்களாட்சி நடைபெறும் காலம் இது. நீதிவழி நடைபெற்றுவரும் ஜனநாயக ஆட்சியிலே மக்கள் தத்தம் தேவைகளையும் உரிமைகளையும் எதிர்காலச் சமுதாயத்தின் நன்மைகளையும் சிந்தித்துத் செயலாற்றக் கூடியவரான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தன்னலமற்ற சேவை முதலிய அம்சங்களுடன் கூடிய ஒருவரையே ஆட்சிமன்றத்திற்கு தெரிவு செய்து செய்து அனுப்ப வேண்டும். இவ்விஷயததில் படித்தவர் முதல் பாமரர்வரை ஒவ்வொரு வாககாளருக்கும் மிக்க பொறுப்புண்டு.'

இவ்வாறு சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கல்வயல் வீதியில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரித் தமிழரசு வேட்பாளரும் சாவகச்சேரி முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினருமான திரு. வ. ந. நவரத்தினம் கூறினார். திரு. நவரத்தினத்தை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு திரு. எஸ். கந்தசாமி தலைமை தாங்கினார். திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

'பொது மக்கள் தமது இனத்திற்கு, தமது சமூகத்திற்கு, மொழிக்கு அவர்களின் எதிர்கால சமுதாயத்திற்கு நல்ல உயர்வை வாழ்வை அளிக்கக்கூடிய சுயநலமற்ற பொது நோக்குள்ள தேவைகள் எதுவென்றும் இதைக் கடமை உணர்ச்சியுடன் சுயநலம் பேணாது கட்டுப்பாட்டிற்கு அமைந்து சேவை செய்யக் கூடிய தமிழர் அரசியற் கட்சி எதுவென்றும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

எமது மக்கள் தமது எதிர்கால சமுதாயத்தின் வளர்ச்சியில் அவர்களின் சுதந்திரமான வாழ்விற்கு அத்திவாரம் அமைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். எமது எதிர்கால சமுதாயத்திற்கு இப்பொழுது வேண்டுவது என்ன என்பதை நாம் முதலில் ஆராய வேண்டும் அப்படி ஆராயும் உரிமை பெற்று தன் தாய்மொழியைப் பேணி குடியுரிமை பெற்று சுதந்திரப்பிரஜைகளாக வாழ வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி எமது மொழி, கலை, கலாசார, குடி உரிமைகளுக்காக ஆட்சிமன்றத்தின் உள்ளும் புறமும் அயராது உழைத்து புனித போராட்டங்களையும் நடத்தி வந்திருங்கிறது. இந்த உண்மையை எந்த ஒரு குழந்தையும் நன்கு அறியும்.

இதே வேளையில் எமது தொகுதி அபிவிருத்தி வேலைகளிலும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே எமது கட்சி மற்றக் கட்சிகள் செய்தவற்றிலும் நூறு மடங்கு அதிகமாகச் செய்துள்ளது.

ஜனாப் முத்துராசா, தென்மராட்சித் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் வழக்கறிஞர் திரு. நா. அருணாசலம், வாலிப முன்னணிச் செயலாளர் திரு. எஸ். பி. கணபதிப்பிள்ளை, செல்வி கிருபைராணி வைத்திலிங்கம், திரு. கே. இராஜதுரை உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

முஸ்லிம்கள், தமிழர் ஆகிய மூன்று இனத்தவர்களும் ஒரே மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் நாம் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரைத் தவிர வேறு எவரையும் ஆதரிக்கமாட்டோம் இன்று இரண்டு சிங்களச் சகோதரர்களை எதிர்க்கட்சியினர் தூண்டி விட்டிருக்கின்றனர். ஆனால்எந்தச்சக்திகள்வந்தாலும் எம்மைப்பிரிக்க முடியாது''.

முள்ளியவளை காட்டு விநாயகர் வீதியில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய கிழக்கு மூலை தெற்கு சிங்களப் பிரிவு கிராமசபைத் தலைவர் திரு. எஸ். அப்புகாமி மேற்கண்டவாறு கூறினார்

ஆதரித்து நடந்த இக்கூட்டத்துக்கு திரு. ஆ. சின்னத்தம்பி தலைமை தாங்கினார்.

திரு. சிவசிதம்பரம் பேசும்போது, சென்ற 10 ஆண்டுகளில் வவனியாத் தொகுதி முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் படித்த வாலிபர் தொழில்இன்றி வாடியகாலம் மாற்றப்பட்டதென்றும் சொன்னார்.

வவுனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா சிங்களச்சகோதரர்கள்பலர்உட்பட வேறு பலரும் பேசினர்

## பறைநாகம்

பருத்தித்துறை, சனி

புந்தூரை சேர்ந்த திரு. எஸ். செல்வரத்தினம் என்பவரது வீட்டில் எட்டடி நீளமான ஒரு பறைநாகம் கண்டு அடிக்கப்பட்டது.

# "சகல இன உரிமைகளுக்கும் எமது கட்சி போராடும்"

## ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகம் போன்று இரு பல்கலைக்கழகங்களை உடனடியாக நிறுவுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இவற்றில் ஒன்று யாழ்ப்பாணத்திலும்மற்றது தெற்கில் காலியிலும் நிறுவப்படும். லண்டன் மற்றும் பிறநாட்டுப் பரீட்சைகளுக்கு நமது மாணவர்கள் தோற்ற வாய்ப்பும் வசதியுமளிக்குமாறு அரசாங்கத்தைக் கோருவோம்.'

ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கட்சித் தலைவர் திரு. ஆர். விஜய இந்திரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'உண்மையான ஜனநாயக அமைப்பை நிறுவி ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்கி நாட்டின் இருபெரும் சமூகத்தினராகிய சிங்களவரையும்தமிழரையும்ஒன்றுபடுத்தி நாட்டில் சகலஇனத்தவரது உரிமையையும் பாதுகாக்கப் போராடுவதற்கே எங்கள் கட்சி உருவாக்கப்பட்டது.

லஞ்ச ஊழலே நாட்டின் பொருளாதார நிலையை மோசமாக்கியுள்ளது. லஞ்ச ஊழலில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து நாட்டில் லஞ்ச ஊழல் அடியோடு நீக்கப்படுவதற்கு முயற்சி செய்வோம்

வடக்கில் மக்களுக்குப் பீதியை விளைவிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள இராணுவத்தை நீக்கி அதன் இடத்தில் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்கவும் ஹெந்தளை, வத்தளை, கல்பிட்டி ஆகிய இடங்களில் போன்று கள்ளக்கடத்தலைக் கண்காணிக்கவும்நன்குபயிற்றப்பட்ட பொலிஸ் படை இங்கும் நிறுவப்பட வேண்டுமென அரசாங்கத்தைக் கோருவோம்.

மேலும் நாட்டில் இன்று 14,000.க்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலையின்றி அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு ஆசிரியநியமனம்வழங்கி ஆகக் குறைந்தது மாதம் ஒன்றுக்கு 300 ரூபா வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

அடுத்து கொழும்பு தெற்கு தொகுதியில் தபாற் கந்தோர்களின் கட்டிடங்களை நல்லமுறையில் அமைக்கவும் பம்பலப்பிட்டி கட்டடங்களுக்கு முன்னுள்ள அழுக்கடைந்த திருத்தப்படாத வெற்றிடத்தைத் திருத்தியமைப்பதற்கும் வீடமைப்புத் திட்ட அமைச்சின் உதவியோடு முயற்சிப்போம்.

எங்கள் ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சி, விஞ்ஞானம், தொழில் நுட்பவியல், பொறியியல், சட்டத்துறை வைத்தியத்துறையாகிய சகல துறைகளையும் விரிவாகக் கற்க இன்றியமையாததும் சர்வதேச மொழியானதுமான ஆங்கிலம் கல்வித்துறையில் இலங்கையின் மற்றமொழிகளோடு இணைந்து முக்கியத்துவம் பெறவேண்டும் எனவும் அரசாங்கத்தை வற்புறுத்தும்.

மற்றும் நாட்டின் பொருளாதார சமூக அரசியல் விஷயங்களில் நாட்டிற்கு நலன் தரும் வகையில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும்.

## அனுராதபுரத்தில் பயங்கரக்கொள்ளை

அனுராதபுரம், சனி

அனுராதபுரம் சிராவஸ்திபுரம் என்னுமிடத்தில் பயங்கரக் கொள்ளை ஒன்று நடைபெற்றதாகவும் ஆயுதம் தாங்கிய நால்வர் இதில் ஈடுபட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைக் கோஷ்டி பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுவிட்டதாம். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மிகமிகச் சொற்பமான விஷயங்களைப் பற்றி மிக மிக அதிகமாக அறிந்துகொள்கிறவனே நிபுணன் ஆகிறான்.

— நிகலஸ் எம்பட்லர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 27-ந் திகதி (10-5-70)

## ஏன் இந்த அச்சம்?

தேர்தலுக்குப்பின்னர் உடனடியாகவோ அல்லது அதற்கு முன்னரோ ஆயுதப் படைகள் நாட்டின் அதிகாரத்தைக் கைப் பற்ற முயற்சிக்கலாமெனத் தாங்கள் அஞ்சுவதாகக் கூட்டணித் தலைவர்கள் கவர்னர் ஜெனரலைச் சந்தித்துக் கூறியிருக்கின்றனர். தாங்கள் இவ்விதம் அஞ்சுவதற்கான காரணங்களையும் அவர்கள் கவர்னர் ஜெனரலிடம் தெரிவித்திருப்பதுடன் அவரைச் சந்தித்த பின் நள்ளிரவில் ஓர் அறிக்கையையும் விடுத்திருக்கின்றனர்.

''பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாகவோ, முன்னதாகவோ நாட்டின் அதிகாரத்தினை ஆயுதந் தாங்கிய படைகளோ ஒரு பகுதியினரோ கைப் பற்ற முயற்சி செய்வதாக எமக்குச் செய்திகள் வருகின்றன. தற்போதிருக்கும் அரசாங்கத்துக்கு தேர்தலில் வீழ்ச்சி ஏற்படும்என்ற அறிகுறி தோன்றும் பட்சத்தில் இம்மாதிரி நடைபெறுமெனக் கூறப்படுகிறது' என்று அந்த அறிக்கையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் கூட்டணியைச் சேர்ந்த மற்றும் சில தலைவர்களும் கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கின்றனர். அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிடப்பட்டிருப்பதாக இராணுவம்மீது 'பழி' சுமத்தப்பட்டிருப்பதை இராணுவ அதிகாரிகள் 'பெரிய வேடிக்கை' என்று கூறுவதாக ஒரு பிரபல ஆங்கிலத் தினசரி நேற்று வெளியிட்டிருந்த தலைப்புச் செய்தியில் எடுத்துக்காட்டியிருந்தது. ஏன் இந்த அச்சமும் எதற்காக இந்தச் சமாதானமும்?

1956-ம் ஆண்டில்பொதுத் தேர்தல் நடைபெற்ற சமயத்திலும் இப்படித்தான் 'சர்வாதிகார ஆட்சி'பற்றி பேசப்பட்டது. 1965-ம் ஆண்டில் தேர்தல் முடிந்து திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது மந்திரிசபையின் ராஜினாமாவைச் சமர்ப்பிப்பதில்

தாக மற்றொரு வழக்கும் விசாரணை செய்யப்பட்டிருக்கின்றன.

தேர்தல் முடிந்து ஒரு கட்சியினரோ கூட்டணியினரோ ஆட்சிக்கு வந்ததும் மற்றொரு கட்சியினரோ கூட்டணியினரோ அதைக்கவிழ்ப்பதற்கு சதி முயற்சியிலீடுபடாவிட்டாலும் அவர்கள் கொண்டுவரும் எந்தத்திட்டத்தையும் செயலையும் எதிர்த்து மீண்டும் தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சி செய்வதும் 'இந்த அரசாங்கம் ஆறு மாதங்களுக்குக் கூட ஆட்சியில் இருக்கமாட்டாது' என்று ஆருடம் கூறுவதும் பலருக்கும் பலவித சந்தேகங்களையும் பலவித தவமுன எண்ணங்களையும் தோற்றுவிக்க ஏதுவாகின்றன.

மக்களுக்காக மக்களால் நடாத்தப்படும் ஆட்சிதான் ஜனநாயக ஆட்சி என்பது உண்மையானால் மக்கள் அளிக்கும் தீர்ப்பை தேர்தலில் ஏற்றுக் கொள்ள வேண்டியது மக்களுக்குச் சேவை செய்வதற்கு முன் வரும் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும்.

உண்மையிலேயே மக்களுக்குச் சேவை செய்வதற்கே தங்களை அர்ப்பணித்திருந்தால், பதவி மோகமோ, அதிகார ஆசையோ இவர்களுக்கு இல்லையென்றால் இவர்கள் எதற்காக இராணுவ ஆட்சிபற்றியும், சர்வாதிகார ஆட்சிபற்றியும் அஞ்ச வேண்டும்?

'இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய சூழ்நிலை தோன்றுகிறது என்று அர்த்தப்படக்கூடிய முறையில் இந்தியாவின் முன்னாள் இராணுவ தளபதிகளில் ஒருவரான கே. எம். காரியப்பா சமீபத்தில் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். இதற்கு இந்திய இராணுவத்தின் தளபதியாகவிருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற ஜெனரல் குமாரமங்கலம் பதிலளித்தபோது 'நல்லாட்சி நடத்துவதாக இருந்தால் எதற்காக இராணுவ ஆட்சிபற்றியோ, புரட்

# தனியரசுதான் ஈழத் தமிழருக்கு

# ஒரே ஒரு வழி

## சுந்தரலிங்கத்தாருடன் சுவையான ஒரு பேட்டி

அடங்காத்தமிழன்; அஞ்சா நெஞ்சன் திரு. செல்லப்பா சுந்தரலிங்கம் பார்க்காத வேலையில்லை; பாஸ் பண்ணாத பரீட்சை இல்லை. எந்த இனத்தவராக இருந்தாலும்சரி, எந்தச்சமயத்தைச் சேர்ந்தவரென்றாலும் சரி, அவரைப்பற்றி அறியாத மனிதரில்லை பதவி அவருக்கு கால்தூசி. உயர்ந்த உத்தியோகத்தையெல்லாம் உதறித்தள்ளியிருக்கிறார். சிறந்த கல்விமானும், நேர்மையின் சிகரமுமாக விளங்கிவரும் அவர் இம்முறை பொதுத்தேர்தலில் தமிழரசுத் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தை எதிர்த்து காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிடுகிறார், தோல்வியைக் கண்டு அஞ்சாதவர். வவுனியா, மூதூர்தொகுதிகளில் கூட முன்னர் போட்டியிட்டிருக்கிறார். வவனியா பட்டினசபைத் தேர்தலில் ஒரே முறையில் பல வட்டாரங்களில்போட்டியிட்டிருக்கிறார்.

75 வயதான இவருக்கு இன்னும் இளம் துடிதுடிப்பு மறையவில்லை. ஈழத்துதமிழ் தலைவர்களுக்குள் முதியவர். சரியோ, பிழையோ, தான் எடுத்த காரியத்தை கடைசி மட்டும் கைவிடாது போராடுபவர். அதன்முடிவுவெற்றி அல்லது தோல்வியாக இருந்தாலும் அக்கறைப்படாதவர். எந்த சாதாரணமனிதருடனும் தோளில்தட்டி அன்பாகவும், நகைச்சுவையாகவும் பேசி, தன் வழிக்குக் கொண்டுவருவதில்இவர்ஒரு திறமைசாலி. ஆட்சி மன்றமோ, பொலிஸ் நிலையமோ எங்கே சென்றாலும் தனக்குரியபாணியில் நடந்துகொள்பவர்' அவரது பிடிவாத குணம் யாவருக்கும் தெரிந்ததொன்று.

1956-ம் ஆண்டு யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில் நிர்வாகிகளில் ஒருவராக இருந்தபோது, அக்கோயிலை சிறுபான்மைத்தமிழருக்குத் திறந்துவிட்டு பலரதுபாராட்டையும்பெற்ற இப்பெரியார் 1968ம்ஆண்டு மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் சிறுபான்மைத் தமிழரைச் செல்ல விடாதுதனிமனிதனாகநின்று கடைசிவரை எதிர்த்தார். அதற்கு அவர்கூறும் காரணம்:- கைலாயபிள்ளையார் கோவில், நிர்வாகிகளின் சம்மதத்துடன் திறந்துவிடப்பட்டது; மாவிட்டபுரத்தில்

கீரிமலையிலுள்ள 'மகர லிங்க வாச'த்திற்குநேராகச் சென்றோம். வீட்டிற்கு விருந்தை கிடையாது. யாராக இருந்தாலும் நேராக நடுகோலுக்குச் செல்லலாம். அதுதான் அவரது ஆலோசனை மண்டபம். அடுக்கடுக்காக புத்தகங்கள் 'பிரோவில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. சார்மனைக்கதிரை மூன்று அதைச்சுற்றிவர பல சார்மனைக்கதிரைகள் அருகே ஒருவாங்கு. அர்ச்சுனனுக்கு கண்ணன் உபதேசம் செய்யும் கீதைக்காட்சி [செம்பிஞல்செய்தது)புத்தக'பிரோவில் காட்சியளிக்கிறது.

### 1803ம்ஆண்டின் இலங்கைப்படம்

நேர் எதிரில் உள்ள உள்ள பீரோவில் ஒருபெரிய இலங்கைப்படம் மாட்டப்பட்டிருக்கிறது. அப்படம் 1803 ம்ஆண்டு தயாரிக்கப்பட்டது. அதில் 'தமிழ் ஈழம்' தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப் பெறுவதே அவரது நோக்கம், எங்களைக் கண்டதும் சார்மனைக் கதிரையில் படுத்திருந்த சுந்தரலிங்கம். சற்று எழுந்து 'வாங்க தம்பி வாங்க அமருங்கள் என்றார்' 'ஈழநாட்டிலிருந்து வந்திருக்கிறோம்'' என்றோம். கன்வசிங் முடித்துக் கொண்டு களைப்புற்று வந்து அப்பொழுதுதான் அவர் படுத்திருந்தார். பச்சை நிற ஏ 40 கார் ஒன்றுவந்து நின்றது. அதிலிருந்து மூவர் அவசரமவசரமாக வந்து ஐயாஒரு செத்தவீடுஉடனடியாகப் போக வேண்டும் என்றனர். திரு. சுந்தரலிங்கம் எங்களைப்பார்த்தார். திருமதி சுந்தரலிங்கம் 'அவசியம் போகத்தான் வேண்டும்' என்றார் அந்த அம்மையாருக்குத்தான் தன் கணவனின் லட்சியத்தில் எவ்வளவு ஆர்வம், அக்கறை!

இலங்கை கணிதப்புலமைப் பரிசையும் பெற்றார். விஞ்ஞான பாடத்திறமை காரணமாக இலங்கை அரசாங்க உபகார நிதி பெற்று இங்கிலாந்தில் உயர் கல்வி பெற்றார். பி.எஸ்.சி. (லண்டன்) வகுப்பில் கணிதத்துறைகளில் பரிசும் பாராட்டும் பெற்றார். பி எஸ். ஸி. [ஒனேர்ஸ்] முதற்தர சித்திபெற்ற மாணவனுக்கு வழங்கும் 'உவில்லியம் லெப்பொக்' ஞாபகப்பரிசு பெற்றார். தூய கணிதத்தில் எலன் உவாட்சன் உபகாரநிதி, பிரயோக கணிதத்திற்கு 'மேயர் ரேட்சைவட்' உபகாரநிதியும் பெற்றார். எம்,எஸ்.ஸி.வகுப்பில் படிக்கும் போது 'உவில்லியம் எக்சிபிசன்' என்ற பரிசைப் பெற்ற ஒரே ஒரு ஆசிய மாணவர் இவர்தான் ஒக்ஸ்வோட் சர்வகலாசாலையில் கணிதத்துறையில் ஒனேர்ஸ்தகைமையில்முதல் வகுப்பில்இடம்பெற்றவரும் இவர்தான். இந்திய சிவில் சேவிஸ் (ஐ சி எஸ்) பரீட்சையில்இந்திய சாம்ராச்சியத்தில் 3வது ஆளாக சித்தி பெற்றார், பரிஸ்டர் பரீட்சையில் கிறிமினல் சட்டத்தில் முதல்வகுப்பு ஒனேர்ஸ் தகுதியுடன் சித்திபெற்றார் இப்படியாக இன்னும் பல பரீட்சையில் விசேஷ சித்தி பெற்றுள்ளார்.

### அரசியல் பிரவேசம்

இந்திய சிவில் சேவிஸ் விட்டு இலங்கை சிவில்ஸ் சேவிஸ் மாற்றம் பெற்று பதுளை கச்சேரியில் ஓ ஏ. ஆக கடமையாற்றினார். பின் சிவில் சேவையை ராஜினமா செய்துவிட்டு கொழும்பு ஆனந்த கல்லூரி உதவி அதிபராக கடமையாற்றினார். இலங்கை சர்வகலாசாலையில் கணிதவிரிவுரையாளராக (ஒரே ஒரு இலங்கையர்) 18 ஆண்டுகள் கடமையாற்றியபின் ஐவர் ஜென்



தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவர் திரு நவரத்தினத்துடன் நீங்களும் சேர்ந்துஒத்துழைத்துதமிழ் ஈழத்திற்காக போராட முடியாதா? இதுதான்முதலாவது கேள்வி.

அவரது பதில்: ஏன் முடியாது! பலதடவை அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன் லட்சியத்தை அடையும் வழியில் தான் இருவருக்கும் வித்தியாசம் இருக்கிறது. நான் சாம,பேத, தான, தண்டம் என்கிறேன் அவர் சாமபேத சத்தியாக்கிரகம் என்கிறார்.

கே- சத்தியாக்கிரகத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

தனியரசுகோரும் பிரேரணை கூட ஒன்று நிறைவேற்றப்பட்டு, பின்தலைவரின் வேண்டுகோளின்படி, வாபஸ் பெறப்பட்டது: தமிழ்க்காங்கிரஸ் தலைவரே ஒரு சமயம் தனிநாடு கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். பருத்தித்துறையில் நடந்ததமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டில் வாலிப முன்னணியினர் கொண்டுவந்த 'தனிநாடு' கோரிக்கை பிரேரணை பின் தலைவரின் ஆலோசனைப்படி வாபஸ் பெறப்பட்டது. 1956-ம் ஆண்டு களனியில் நடந்த யூ. என். பி. கட்சி மகாநாட்டிற்கு முன்னாள்

பேட்டி கண்டவர்:- நமது அலுவலக நிருபர்

**கா. யோகநாதன்**

ப- சத்தியாக்கிரகத்தின் மூலம் நமது லட்சியத்தை அடைய முடியாது. சிங்கத்தின் முன்னால் ஆட்டுக்குட்டி நின்று தண்ணீர் குடிக்கமுடியுமென்று யார் தான் ஒத்துக்கொள்வார்கள்.

கே- தமிழருக்கு தனியரசு கோரும் உங்கள் திட்டத்திற்கு ஆதரவு இருக்கிறதா?

ப- 1955-ம் ஆண்டு ஆடசி மன்றத்தில் ஈழத்தமிழருக்கு தனிநாடுகோரி ஒரு பிரேரணை கொண்டுவந்தேன். அதனை இன்று தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு நவரத்தினமும் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் எனது கொள்கையைத்தான் ஈழத் தமிழ் மக்கள் எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள்என்ற நம்பிக்கை எனக்குண்டு. அது நடக்கத்தான் போகிறத.

கே- தமிழரசுக் கட்சி

சாவகச்சேரி எம் பி. தனிநாடு கோரி ஒரு பிரேரணையை சமர்ப்பித்தார். அது நிராகரிக்கப்பட்டது. வட்டுக்கோட்டையில் போட்டியிடும் திரு. தியாகராசா 1956-ம் ஆண்டு தமிழருக்கு தனிநாடு கோரி ஓர் இயக்கம் நடத்தினர். அப்போதுபலர் அதற்கு ஆதரவளித்தனர். ஆதலால் தனிநாடு கோரிக்கை ஒவ்வொரு தமிழனின் நெஞ்சத்திலும் இடம்பெற்றிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

(தொடரும்)

### தேவை

வான் சேல்ஸ் மென் தேவை, பிணைப்பணம் கட்டக்கூடியவர் நேரில் விண்ணப்பிக்கவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ் 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

2120

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 27-ம்திகதி (10-5-70)

**மேஷம்:** பொதுத் துறையில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவு கிடைக்கும்.

**ரிஷபம்;** தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக் கூடும். பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்;** திருடர் பயத்திற்குஇடமுண்டு. விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கடகம்:** போதும் என்ற மனத்துடன் இருப்பீர்கள் முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும் குடும்பத்திலும் அன்பு தவமும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பு குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறு பூசல் தோன்றி மறையும் அமைதி நன்று

**கன்னி:** தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. கல்வியில் முன்னேற்றமுண்டு

**துலாம்:** உறவு முறைகளில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டத்திற்கும் இடமுண்டு.

**விருட்சிகம்:** தனதானிய நஷ்டத்துடன் பூமிப் பிணக்கும் தோன்றக்கூடும், கடமையாற்றும் இடத்தில்நிதானம் வேண்டும். மௌனம் நன்று.

**தனுசு:** களஸ்திர வழியால் சுகம் உண்டு குடும்பத்தில் பாசத்தின் பிணைப்பு இறுகும்.

**மகரம்** நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். பொருட் செலவும் உண்டு

**கும்பம்:** புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு.

**மீனம்:** உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு, கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். தெய்வத்தின் துணையும் உண்டு.

— சோதிடக் கலாநிதி —

திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேர்தல் நடைபெற்ற சமயத்திலும் இப்படித்தான் 'சர்வாதிகார ஆட்சி'பற்றி பேசப்பட்டது. 1965-ம் ஆண்டில் தேர்தல் முடிந்து திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது மந்திரிசபையின் ராஜிநாமாவை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டபோதும், 'ராஜினாமாச்செய்யக்கூடாது' என்று 'அலரிமாளிகை'முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போதும் சர்வாதிகார ஆட்சி பற்றி அச்சம் தெரிவிக்கப்பட்டது. இதைச் சம்பவங்கள் தவிர 1960-ம் ஆண்டில் நடந்த தேர்தலின்பின் ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்யப்பட்டதாக ஒருவழக்கு விசாரணையும் 1965-ம் ஆண்டுத் தேர்தலின்பின் ஆட்சி பீடத்திலமர்ந்த திரு டட்லி சேனநாயக்காவின் தலைமையிலான 'தேசியஅரசாங்கத்தை'க் கவிழ்க்கச் சதிசெய்த தெரிவித்திருந்தார். இதற்கு இந்திய இராணுவத்தின் தளபதியாகவிருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற ஜெனரல் குமாரமங்கலம் பதிலளித்தபோது 'நல்லாட்சி நடத்துவதாக இருந்தால் எதற்காக இராணுவ ஆட்சியைப்பற்றியோ, புரட்சிச் சதியைப்பற்றியோ அஞ்ச வேண்டும்?' என்று கேட்டிருந்தார்.

இதே கேள்வியை அதாவது நமது நாட்டில் மக்களுக்குச் சேவை செய்யவே முன்வந்துள்ள தலைவர்கள் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தி, நல்ல முறையில் எவ்வித பாரபட்சமுமின்றி சகல மக்களுக்கும் நீதி நியாயம் வழங்கி, அவர்களே தங்கள் நலன் எனக் கருதி ஆட்சி செய்வதாக இருந்தால் தேர்தலுக்கண்டு தேர்தல் முடிந்ததாலும் இராணுவ ஆட்சி வந்துவிடுமோ என்று எதற்காக அஞ்ச வேண்டும் என்று நாமும் கேட்க விரும்புகிறோம்.


# அறிவித்தல்

யாழ். நகரில்

## 'ஈழநாடு' பத்திரிகையின்

சந்தாதாரராக விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசதாரர்களுடன் தொடர்புகொண்டு பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

எம். குலவீரசிங்கம், 45 பலாலிரோட், வண்ணார் பண்ணை, அரியாலைப்பகுதி துவிச்சக்கர வண்டி மூலம்.
டேவிட் கிரேகோரி, 40, வேம்படி வீதி, துவிச்சக்கரவண்டி மூலம்.
எஸ். என். பாலசுப்பிரமணியம், பஸ்நிலையம்.
டபிள்யூ. எஸ். தம்பையா, பஸ்நிலையம்.
எவ். ஏ. எஸ். நியூஸ் சென்றர், பஸ்நிலையம்.
கே. சாந்தலிங்கம், ஆஸ்பத்திரி வீதி.
எஸ். கிருஷ்ணசாமி, 36, பெரியகடை.
ஜெயபாரதகபே, சின்னக்கடை.
விமலாஸ்ரோஸ், கே. கே. எஸ். வீதி.
எம். எக்ஸ். செல்வநாதன், பஸ் நிலையம்.
வி. கே. கந்தசாமி, அன்பு புத்தகசாலை.
தமிழ்ப் பண்ணை கே. கே. எஸ். ரோட்.
எம். பி. சின்னராஜா, பெரியகடை.
எஸ். பரஞ்சோதி, பஸ்நிலையம்.
எஸ். துரைராஜா, கே. கே. எஸ். வீதி.
கே. குமரையா, கே. கே. எஸ். வீதி.
ரி. அருளம்பலம், பாலா கபே, கே. கே. எஸ். வீதி
கே. நடராசா, ஸ்ரேசன் வீதி.
முனீஸ்வரா கபே, ஸ்ரான்லி வீதி.
வி. எஸ். எஸ். கே. ஆஸ்பத்திரி வீதி.
மகாத்மா புத்தகசாலை, மணிக்கூண்டு வீதி.
ஏ. செல்வத்துரை பிரதான வீதி.
எஸ். இராஜரத்தினம். வில்லூன்றி.
எஸ். துரைராஜா, அரியாலை.
என். சங்கரப்பிள்ளை, ஆனைப்பந்தியடி. 2256


மைத் தமிழரைச் செல்ல விடாது தனிமனிதனாகநின்று கடைசிவரை எதிர்த்தார். அதற்கு அவர்கூறும் காரணம்:- கைலாயபிள்ளையார் கோவில், நிர்வாகிகளின் சம்மதத்துடன் திறந்துவிடப்பட்டது; மாவிட்டபுரத்தில் குருக்களின் சம்மதம் இல்லாமல் பலாத்காரமாக ஆலயப்பிரவேசம் நடக்கமுயற்சி நடந்தமையால்எதிர்த்தேன் என்கிறார். ஆனால் இவ் வருடம் (1970) மாவிட்டபுரத்தில் ஆலயப்பிரவேசபிரச்னை இருக்காது நல்லூர், தொண்டமானாறு செல்வச்சந்நிதி போன்று, எல்லோரும் ஒரே இடத்தில்நின்று வணங்குவதுபோல், மாவிட்டபுரத்திலும் பாகுபாடின்றி எல்லோரும் ஒரே இடத்தில் நின்று வணங்கக்கூடியவிதத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது. இதனால் இவ்வருடத்தோடு மாவிட்டபுரப்பிரச்னை சுமுகமாகத் தீர்ந்துவிடவழிபிறக்குமாம்.

## இத்தனை உத்தியோகங்கள்!

திரு. சுந்தரலிங்கம் ஒரு சிறந்த விவசாயி. வயலில் தானே இறங்கி, மற்றும் தொழிலாளர்களுடன் சேர்ந்து வேலை செய்வார் தொழில்விஷயத்தில் ஏற்றத்தாழ்வு பாராட்டாதவர். அவர் ஒரு எம். ஏ. (ஒக்ஸன்) பி. எஸ், ஸி. (லண்டன்) பாரிஸ்டர், அப்புக்காத்து, முன்னாள் ஐ ஸி. எஸ், ஸி. ஸி. எஸ், முன்னாள் ஆனந்தாகல்லூரி உப அதிபர், சர்வகலாசாலைகணிதப்பகுதி பேராசிரியர், முன்னாள்வணிகவர்த்தக மந்திரி. முன்னாள் வவனியா எம். பி.

அவர் பார்த்த வேறு சில உயர்ந்த வேலைகள்பற்றி அநேகருககுத் தெரியாமலிக்கலாம். மாஜிஸ்திரேட்டாகவும், மாவட்ட உதவிநீதிபதியாகவும்கடமையாற்றியிருக்கிறார். அதுமட்டுமல்ல பொலிஸ் சுப்பிரின்டனாகவும் சிறைச்சாலை உதவி சுப்பிரின்டனாகவும்கூட பணியாற்றியிருக்கிறார்.

அவரை பேட்டி காண்பதற்காக, நானும் 'ஈழநாடு' அரசியல்நிருபரும் கீரிமலையிலுள்ள அவரதுஇல்லத்திற்கு சென்றிருந்தோம். தனியரசு கோரும் தலைவரை சந்திப்பதென்றால் எந்தநாட்டிலென்றாலும்சரி பெரும் சிரமப்படவேண்டும்!

எப்படியும் இன்று பேட்டி கண்டுவிடவேண்டும் என்று முடிவு செய்துவிட்டோம். கீரிமலைநோக்கிச்சென்றோம். நேரம்நண்பகல் 1 மணி திரு சுந்தரலிங்கத்தின் கார், சண்முகநாதக்குருக்களுடன் மாவிட்டபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. திரு. சுந்தரலிங்கம் இல்லத்தில் சாப்பாட்டிற்காகவந்திருப்பார் என்பது எனக்குநிச்சயமாகத் தெரிந்துவிட்டது.

றனர். திரு. சுந்தரலிங்கம் எங்களைப்பார்த்தார். திருமதி சுந்தரலிங்கம் 'அவசியம் போகத்தான் வேண்டும்' என்றார். அந்த அம்மையாருக்குத்தான் தன் கணவனின் லட்சியத்தில் எவ்வளவு ஆர்வம், அக்கறை! இந்திய சுதந்திரப்போராட்டங்களில் எல்லாம் இல்லத்தரசிகள்தான் தங்கள் கணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார்கள். அதனால் தான் அவர்கள் தங்கள் இலட்சியத்தில் கொள்கையில்குறிக்கோளில் முன்னேறி வந்தார்கள்.

'தம்பி ஒருமணி நேரம் பொறுங்கள் நான் சீக்கிரம் வந்து விடுகின்றேன் என்றார் என்னசெய்வது தேர்தல் சமயமல்லவா? செத்தவீடு சாமத்தியவீடு கலியாண வீடுகளுக்கு போகாமலிருக்க முடியுமா? அவர் சென்றுவிட்டார். நாங்கள் கீரிமலைக்கு சென்றோம். ஒருமணி நேரம் நீராடியபின் சரியாக 2மணிக்கு மீண்டும் வந்தோம். மணி 2-10 ஆகிவிட்டது அவர்வரவில்லை. அவரைக் கூட்டிச் செல்வதற்கு இன்னும் இருவர் வந்திருந்தனர்.

## நான்கு லிங்கங்கள்

உரும்பராயில் பிறந்த திரு சுந்தரலிங்கத்துடன் பிறந்த நால்வரும், ஆற்றல் மிகுந்த அறிஞர்கள் உயர்பதவியில் உள்ளவர்கள் எவரும் எவருக்கும் சளைத்தவர்களல்லரென்பதை எடுத்துக் காட்டும் திறமைசாலிகள்.

கலைமாண்பு, புலமைநலன் பெற்ற சுந்தரலிங்கம் கொழும்பு சென் யோசப் கல்லூரியில் 7ம்வகுப்பு படிக்கும் போதே கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் பரிசு பெற்றிருக்கிறார். யாழ் சென் யோன்ஸ் கல்லூரியில் வேதப்பாடப் பரிசு பெற்றுள்ளார். கேம்பிறிட்ஜ் ஜூனியரிலும். சீனியரிலும் தூயகணிதம், பிரயோக கணிதம், ரசாயனம் ஆகிய பாடங்களில் முதற்தரசித்தி பெற்றிருக்கிறார், அகில

ம்பு ஆனந்த கல்லூரி உதவி அதிபராக கடமையாற்றினார். இலங்கை சர்வகலாசாலையில் கணிதவிரிவுரையாளராக (ஒரே ஒரு இலங்கையர்) 18 ஆண்டுகள் கடமையாற்றியபின் ஐவர் ஜென்னிங்ஸ் என்ற ஆங்கிலேயர் சர்வகலாசாலைக்கு உபவேந்தராக நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புக் காட்டும் முகமாக பதவியிலிருந்து விலகிய பின் அரசியலில் பிரவேசித்து முதன் முதலாக வவனியா தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

அவரது மேசையில் குவித்து வைக்கப்பட்டிருந்த தேர்தல் துண்டுப்பிரசுரங்களின் மூலம் அவரைப் பற்றிய மேற்கூறிய சகல விபரங்களையும் அறிந்து கொள்ள முடிந்தது. மணி 2-20ஆகிவிட்டது. அவர் வந்தபாடில்லை. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மணி 2-30 கார் சத்தம்கேட்டது. அவர் வந்துவிட்டார். இறந்த ஒருவரின் வீட்டிற்கு சென்றதால் அவர் நேராக கிணற்றடிக்குச் சென்று ஸ்ஞானம் செய்த பின் நேராக எங்களிடம் வந்தார் மாவிட்டபுர உற்சவ காலத்தில் பார்த்ததிலும் பார்க்க சற்று இளைத்திருந்தார். கன்வசிங் அவரை இந்த நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது. மணி 2-45 ஆகிவிட்டது. தம்பி கொஞ்சம் இருப்பீர்களா சாப்பிட்டுவிட்டுவருகிறேன் என்றார். எங்களால் மறுக்க முடியவில்லை. திருமதி சுந்தரலிங்கம் அவருக்கு சாதம்பரிமாறினார். அதேநேரம் எங்களுக்கும் குளிர்பானம் கொண்டு வந்து தந்தார். கணவர் சாப்பிட்டு முடிந்தபின்னர் தான் அந்த அம்மையார் தனக்கு சாதம்போட்டு சாப்பிட ஆரம்பித்தார். பண்டைய தமிழ் பண்பாடு தனியரசு கோரும் இந்தத் தலைவர் வீட்டில் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் எனது கொள்கையைத்தான் ஈழத்தமிழ் மக்கள் எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள்என்ற நம்பிக்கை எனக்குண்டு. அது நடக்கத்தான் போகிறத.

கே- தமிழரசுக் கட்சி வடக்கிலும் கிழக்கிலும் 19 தொகுதிகளிலும் தமிழ் காங்கிரஸ் வடக்கில் 12 தொகுதிகளிலும் தமிழர் சுயாட்சிக் கழகம் வடக்கில் 4 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. உங்கள் கொள்கைக்கு ஆதரவுபெறவேண்டுமானால் உங்கள் கட்சி காங்கேசன்துறை தொகுதியில் மட்டும் ஏன் போட்டியிடுகிறது?

ப- எனது கொள்கைக்கு உள்ள ஆதரவை ஓரளவு அறியும் பொருட்டே இங்கு போட்டியிடுகிறேன். இத்தொகுதியில் நான் வெற்றி பெற்றால் அது என் கொள்கைக்கு கிடைத்த வெற்றி, பின்னர் மற்றும் தொகுதிகளிலும் ஆதரவு திரட்டுவேன். என் நோக்கத்தை அடைவதற்காக ஆட்சி மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபடுவேன்.

கே- இத் தொகுதியில் நீங்கள் வெற்றி பெறுவதன் மூலம் எதை தீர்மானிக்கலாம்?

ப- தமிழர்கள் சமஷ்டி ஆட்சியையோ (தமிழரசு) ஒற்றை ஆட்சியையோ (தமிழ்காங்கிரஸ் கூட்டாட்சியையோ, (கம்யூனிஸ்ட்) விரும்பவில்லையென்பதையும் தனியரசைத் தான் விரும்புகிறார்கள் என்பதையும் முடிவு செய்யலாம்.

கே- ஆட்சிமன்றத்தில் தாங்கள் சாதித்ததென்னவென்பதை விளக்கிக் கூறுவீர்களா?

ப- தனியரசு கோரிஆட்சிமன்றத்தில் பிரேரணையொன்றைக் கொண்டுவந்ததே பெரிய சாதனை தானே. அந்தப் பிரேரணையின் நோக்கத்தை இன்று தமிழர் சுயாட்சிக்கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது: கடந்த காலத்தில் ஒற்றையாட்சியிலும் சமஷ்டிக் கோரிக்கையிலும் நம்பிக்கை வைத்தவர்களில் ஆயிரக்கணக்கானோர்இந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். தமிழர்விமோசனத்திற்கு எனது வழிதான் ஒரேஒரு வழி என்பதை பலர் இன்று ஒத்துக்கொள்கிறார்கள்.

கே: தனி அரசு கோரிக்கையை மற்றும் கட்சியினரும் ஏற்றுக்கொண்டார்களா?

ப: 1958-ல் வவுனியாவில் தமிழரசு மகாநாடு நடந்த சமயம். தமிழரசு உறுப்பினர்களில்பெரும்பாலானோர் தனியரசுதான் ஒரேவழி என்பதை ஏற்றுள்ளனர்.


# மாபெரும் தேர்தல் கூட்டம்

நல்லூர்த் தொகுதி தமிழரசுக் கட்சி அபேட்சகர்
டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களை
ஆதரித்து
10-5-70 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 6 மணியளவில்
கொக்குவில் கிழக்கு, மாத்தனை கோவிலடியில்
நடைபெறும்.
[3-ம் கட்டை காங்கேசன்துறை வீதிக்கு அருகாமை]
சொல்லின் செல்வன் செ. இராசதுரை
மட்டக்களப்பு, சொற்பொழிவாற்றுவார். 2259



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 10-ம்திக அச்சிட்டு வெளியிடப்பட்டது.



வான் சேல்ஸ்மென் தேவை, பிணைப்பணம் கட்டக்கூடியவர் நேரில் விண்ணப்பிக்கவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ் 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2120

யும் உண்டு.
— சோதிடக் கலாநிதி —
திருமலை க. வேலுப்பிள்ளை


# தேர்தல் போட்டி- 1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர் வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள கமஜனக்கட்சி, இ. தி. க. மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**
**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

## 1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org